10.02.2026

O.S.No.183/2022

DW1- அய்யாத்துரை– த/பெ. மலையராமநாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.02.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. நான் ரயில்வே துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றேன் என்றால் சரிதான்.

2. எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 1 ஆண், 3 பெண் பிள்ளைகள் உள்ளனர்.

3. 1 ஆண் மகன் தான் இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

4. நான் எதிர்கோரிக்கை சொத்தில் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

5. நான் கட்டிய கடை கட்டித்திற்கு கட்டிட வரைபட அனுமதி பெற்றேனா என்றால் இல்லை.

6. கடைக்கு கீழ்பக்கம் என் வீடு உள்ளது என்றால் சரிதான். வீட்டிற்கு கட்டிட வரைபட அனுமதி வாங்கினேனா என்றால் இல்லை.

7. 1பி சொத்திற்கு கீழ்பக்கம் தென்வடலாக ரோடு செல்கிறது என்றால் சரிதான்.

8. 1 சென்டிற்கு எவ்வளவு சதுர மீட்டர் என்று தெரியுமா என்றால் தெரியாது.

9. வா.சா.ஆ.2 ஆவணம் என் பெண் பிள்ளைகளுக்கும், என் மகனிற்கும் இடையே ஏற்பட்ட பாக பாத்திய விடுதலை ஆவணம் என்றால் சரிதான்.

10. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 10 வது பக்கத்தில் காட்டியுள்ள 14 வது சொத்தின் வடக்கு எல்கை மாலாக யார் பெயர் உள்ளது என்றால் கப்பல்ராஜ் மனை என குறிப்பிடப்பட்டுள்ளது.

11. வா.சா.ஆ.2 ஆவணத்தில் எதிர் கோரிக்கை சொத்தின் புல எண் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் உள்ளது. சாட்சி தற்போது இல்லை என்றும் பத்திரம் எழுதுபவர் அவராக எழுதிக்கொண்டார் என பதில் அளித்தார்.

12. பத்திரம் எழுதுபவர் நான் கொடுத்த முன் பத்திரத்தின் அடிப்படையில் தான் பத்திரம் எழுதினார் என்றால் சரிதான்.

13. நான் கட்டிய கடை கட்டிடத்திற்கு சொத்து வரி மற்றும் மின் இணைப்பு ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் நான் கட்டிய வீட்டிற்கு கட்டிட அனுமதி பெற்றுள்ளேன் என்றும் அதே போல் கடைக்கும் கட்டிட வரைபட அனுமதி பெற்றுள்ளேன் என்றும் அது வழக்கிற்கு எதிராக இருப்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

14. வா.சா.ஆ.8 ஆவணம் சர்வே எண்.157/1 சி–யில் என் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான்.

15. பட்டாவின் விஸ்தீரணம் 950 சதுர மீட்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

16. பி.வா.சா.ஆ.5 ல் சர்வே எண்.157/1 சி மேற்கு பக்கம் தென்வடல் அளவு 23.46 சதுர மீட்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

17. பி.வா.சா.ஆ.4 ல் சர்வே எண்.157/1 ஏ–ல் எனக்கு பாத்தியப்பட்ட இடமும் தென்வடலாக 23.4 சதுர மீட்டர் சாலைக்கு சென்றுள்ளது எனவும் அதை மறைத்து என்னுடைய பாக பாத்திய விடுதலை ஆவணத்திற்கு எதிராக எதிர் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் என்னுடைய எதிர்கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட்டு வாதியின் வழக்கு அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

18. வா.சா.ஆ.2 ல் பக்கம் 10 ல் 14 வது சொத்து விவரத்தில் சர்வே எண்.157/1 ஏ–ல் எனக்கு சொத்து இருப்பதாக ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

19. எனக்கு பாத்தியப்பட்ட 18 மற்றும் 9 செண்ட் சர்வே எண்கள்.157/1 சி, 157/1 ஏ–விற்கு மட்டுமே கட்டுப்படும் என்றும் நான் தவறாக வாதி இடத்தில் உரிமை கோருவதால் என் எதிர் கோரிக்கை மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

20. சர்வே எண்.157/1பி–ல் எனக்கு உரிமை இல்லாததால் தான் வா.சா.ஆ.2 ல் மேற்படி சொத்து சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல.

21. வா.சா.ஆ.2 ல் சொத்து விவரம் 14 ல் வடக்கு எல்லையாக கப்பல் ராஜ் என்ற வாதியின் தந்தை பெயர் எல்கை மால் ஆக குறிப்பிடப்பட்டுள்ளதால் என்னுடைய எதிர் கோரிக்கை சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்பதாலும் முரண்தடை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாலும் என் எதிர்கோரிக்கை மனு தள்ளுடிபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

22. என் கடை 2019 ல் கட்டப்பட்டது என்றால் சரியல்ல அதற்கு முன்பே கட்டிவிட்டேன்.

23. என் எதிர்கோரிக்கையிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் 2019 ம் வருடம் நான் கடையை கட்டியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

24. என் எதிர்கோரிக்கை, உறுதிக் கூற்று மற்றும் வா.சா.ஆ.2 ஆவணம் முன் பின் முரணாக இருப்பதால் என் எதிர் கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட்டு வாதியின் பிராது செலவுத் தொகையுடன் அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி